ஜெயிலில் நல்ல முறையில் நடந்து கொண்டால், அதற்கென்று இருக்கிற கமிட்டி பரிந்துரை செய்தால் அந்த அடிப்படையில் விடுதலை செய்வதற்கு வழிவகைகள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது அப்படித் தான் செய்து கொண்டு வருகிறோம். ஒரு நபர் 2/3 தண்டனை அனுபவித்து விட்டால், கிட்டத்தட்ட அது 9, 10 ஆண்டுகள் வரும். உடனே அது கமிட்டிக்குப் போகிறது. இந்தக் கமிட்டி சிபார்சு செய்தால் பெரும்பாலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. சில சமயங்களில் ' கிரேவ் அஃபென்ஸஸ்', பட்டப் பகலிலே நேரடியாக 'டேலைட் கோல்ட் பிளடட் மர்டர்' இப்படிப்பட்ட கேஸ்களைப் பொறுத்தவரைக்கும் மட்டும் நாம் அதை மறுக்கிறோம்.

திரு. எம். முத்தையா: கீழவெண்மணி சம்பவத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து அவர்களுக்கு ஆயுள் தண்டனையாக மாற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கெனவே அப்பீல் செய்து இருப்பதாக மன்றத்தில் நான் அறிவித்திருக்கிறேன்.

Honorarium for inmates of Thanjavur Chatram

* 173 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for the stoppage of honorarium to the inmates of Thanjavur Chatram during September 1973?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சாவூர் சத்திரம் நிருவாகத்திலுள்ள எவருக்கும் மதிப்பு ஊதியம் (honorarium) வழங்கப்படுவதில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் சத்திரம், ஒரத்தநாடு சத்திரம் எந்த நிர்வாகத்தின் கீழ் வருகிறது ? ஆண்டு ஒன்றுக்கு அரசுத் தரப்பில் எவ்வளவு செலவழிக்கப்படுகிறது. வருவாய் எவ்வளவு, செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

1974 சனவரி 25]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு தொகை வழங்குவதில்லை. சத்திரத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து உலுப்பைத் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. உலுப்பைத் தொகை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இது இயங்கி வருகிறது.

சின்னமருதூர் கிராமத்தில் நில ஆக்கிரமிப்புகள்

*174 வினா—**திரு. மு. பழனிசாமி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி, மூலனூர் வட்டாரம், சின்ன மருதூர் கிராமம், போதூரில் க.ச. 210 புறம்போக்கு நிலம் எத்தனை ஆண்டுகளாக யாருடைய ஆக்கிரமிப்பில் இருக்கிறது ?

(இ) அந்த நிலத்துக்கு பட்டா கேட்டு யாராவது விண்ணப்பம் செய்துள்ளார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) சின்னமருதூர் கிராமத்தில் 210 ஆம் சர்வே எண்ணில் உள்ள 2.35 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் 1377 பசலி வரை ஏறத்தாழ 14 ஆண்டுகளாக திரு. கருப்பண்ண கவுண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்தது. 1378 பசலியிலிருந்து 1383 பசலி வரை அந்த நிலம் திரு. பழனிசாமி கவுண்டரின் ஆக்கிரமிப்பில் இருந்து வந்துள்ளது.

(இ) அந்த நிலத்தை ஒப்படை செய்யுமாறு கேட்டு மூவர் விண்ணப்பித்தனர்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இப்படி வசதி படைத்தவர்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு பல் வேறு இடங்களிலே அந்த நிலங்களை விடுவதற்கு மறுக்கிறார்கள். அரசாங்கம் ஏதாவது பொது விதி ஏற்படுத்தி, இந்த நிலங்களையெல்லாம் பிடுங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமா ?